


தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சென்னை கலைவாணர் அரங்கில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் சுய உதவிக்குழு தினத்தை முன்னிட்டு , மாநில அளவிலான மணிமேகலை விருது மற்றும் வங்கிக் கடன் இணைப்புகளை வழங்கி தொடங்கி வைத்தார் . அதனை தொடர்ந்து , விருதுநகர் மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி கலையரங்கத்தில் , தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் , மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வி.ப.ஜெயசிவன் , தலைமையில் , விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் , இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கப்பாண்டியன் , சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.ரகுராமன் மற்றும் சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் , 834 மகளிர் சுய உதவிக்குழுக்களை சேர்ந்த 10,242 மகளிர்களுக்கு ரூ 85.96 கோடி மதிப்பிலான வங்கி கடனுதவிகளை நிதி , சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார் .



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி மூர்த்தி மதுரை மாவட்டம் ஆலத்தூர் பி.ஆர். மஹாலில் 1016 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளை வழங்கினார் உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் .மா.சௌ.சங்கீதா, மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன் பகுதி செயலாளர் சசிகுமார், ஊராட்சி மன்ற தலைவர் சரண்யா ராஜேந்திரன் ஆகியோர் உள்ளனர்.

### கடலூர் மேற்கு மாவட்டம்

# நான்கு சட்டமன்ற தொகுதி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வி. கணேசன் அறிக்கை!



கடலூர், ஜூன் 14 - கழக தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர், தொழிலாளர் நலன்திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் (எனது) தலைமையில் தொகுதி பொறுப்பாளர்கள் முன்னிலையில் இன்று 14062025 சனிக்கிழமை கடலூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள திட்டக்குடி, விருத்தாசலம், பண்ருட்டி, நெய்வேலி ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் கீழ்கண்ட விவரப்படி நடைபெறுகிறது.

அதன் விவரம் கீழ் வருமாறு : 1. திட்டக்குடி சட்டமன்ற தொகுதி காலை: 10 மணி ஜி.வி.மஹால் மங்களூர். 2. விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதி காலை: 11.30 மணி சிவபூஜா திருமண மண்டபம் விருத்தாசலம். 3. பண்ருட்டி சட்டமன்றத் தொகுதி மாலை: 3 மணி வி.வி.எம். மஹால் லிங் ரோடு பண்ருட்டி. 4. நெய்வேலி சட்டமன்ற தொகுதி மாலை: 5.00 மணி தொ.மு.ச. அலுவலகம் நெய்வேலி. ஆகிய இடங்களில் நடைபெறுகிறதுஅது சமயம் ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், ஒன்றிய , நகர, பேரூர், கழக நிர்வாகிகள், மாவட்ட பிரிதிநிதி கள் அனைவரும் கூட்டத் தில் கலந்து கொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு கடலூர் மேற்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் சி.வி. கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### சிதம்பரம் ந. தியாகராஜன் தலைமையில்! குவைத் நாட்டில் தி.மு.க. அயலக அணி சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா, அயலகத் தமிழர் எழுச்சி மாநாடு!

## கார்த்திகேய சிவசேனாபதி - போஸ் வெங்கட் - பரிதி இளம் சுருதி - எஸ்.எம். ஹைதர் அலி பங்கேற்பு!

குவைத், ஜூன் 14- குவைத் நாட்டில் நேற்று (ஜூன் 13 வெள்ளிக்கிழமை) தி.மு.க. அயலக அணி தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. மற்றும் செயலாளர் புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா எம்.பி ஆகியோரின் வழிகாட்டுதலின்படி திராவிட முன்னேற்றக் கழக அயலக அணி, குவைத் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் அயலகத் தமிழர் எழுச்சி மாநாடு மிக பிரம்மாண்டமான முறையில் கொண்டாடப்பட்டது. தி.மு.க. அயலக அணியின் குவைத் நாட்டின் பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு தாயகத்திலிருந்து சிறப்பு விருந்தினர்களாக தமிழ்நாடு அரசு அயலகத் தமிழர் நல வாரிய தலைவரும் தி.மு.க. கழக சுற்றுச்சூழல் அணி செயலாளருமான கார்த்திகேய சிவசேனாபதி, நடிகர், இயக்குனர், தலைமை கழக பேச்சாளருமான போஸ் வெங்கட், தி.மு.கழக அயலக அணியின் மாநில துணைச் செயலாளர் பரிதிஇளம்சுருதி மற்றும் குவைத்தின் தொழிலதிபர், எம்.ஏ ஹைதர் குழும நிறுவனர் டாக்டர், எஸ்.எம்.ஹைதர் அலி ஆகியோர் கலந்து கொண்டனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2010 ஆம் ஆண்டு புலம்பெயர் தமிழர்களின் வாழ்வில் ஏற்றம் காண அவர்களுக்கென தனி நல அமைச்சகம் வேண்டும் என முடிவெடுத்து அதை செயல்படுத்தும் விதத்தில் சட்ட முன் வடிவை ஏற்படுத்தி இருந்தார். பின்பு ஆட்சி மாற்றத்தால் அந்த செயல் திட்டம் கிடப்பில் போடப்பட்டது.

அதன் விளைவாக கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் 2021 ஆம் ஆண்டு அமைந்த திராவிட மாடல் அரசு புலம்பெயர் தமிழர்களுக்கு தனி நல அமைச்சகத்தையும் தனி நல வாரியத்தையும் அமைத்து அவர்களின் வாழ்வில் ஒளி ஏற்றி உள்ளது.

இதற்கு நன்றி கடனாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் அயலக தமிழர்களின் எழுச்சி நாளாக இருக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டது.

இவ் விழாவில் குவைத்தில் தமிழ் பாடத்தில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவர்களை பெருமைப்படுத்தும் விதமாக விழா மேடையில் அவர்களுக்கு சான்றிதழ் வழங்கி கௌரவப்படுத்தப் பட்டனர்.

மேலும் இவ்விழா அயலகத் தமிழர்களுக்கு விழிப்புணர்வை உண்டாக்கவும், தமிழ்நாடு அரசு புலம்பெயர் தமிழர்களுக்கு வழங்கி உள்ள நலத்திட்டங்களை பற்றியும் மேலும் அவற்றை பெறக்கூடிய வழிமுறைகள் பற்றி விளக்கும் விதமாகவும் அமைந்தது.

இவ் விழா குவைத் வாழ் தமிழர்களிடத்தில் பெரும் எதிர்பார்ப்பை உண்டாக்கியது.

### ரிஷிவந்தியம் தொகுதி வாணாபுரத்தில் ரூ.38.95 லட்சத்தில்

# சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கல் நிலையத்துடன் பயணியர் நிழல் குடை!

## வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்

வாணாபுரம், ஜூன் 14- கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி, வாணாபுரம் பகண்டை கூட்டுச்சாலை பகுதியில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் திறப்பு விழா மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், தலைமையில் ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் முன்னிலையில் 10.06.2025 - செவ்வாய்க்கிழமை அன்று நடைபெற்றது.

தமிழக அரசு பொதுமக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது, அந்த வகையில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பல்வேறு திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் நேற்று முந்தினம் ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், வாணாபுரம் ஊராட்சி, பகண்டை கூட்டுச் சாலை பகுதியில் பொதுமக்களில் 30 ஆண்டுகால கனவை நிறைவேற்றும் வகையில், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2022-23ஆம் நிதி யாண்டில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்ட கலைஞர் நூற்றாண்டு விழா பயணியர் நிழற்குடை மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கல் நிலையம், ஸ்வச் பாரத் மிஷன் திட்டம் 2025 26ஆம் நிதியாண்டில் ரூ.5.95 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்ட பொது கழிவறையினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தலைமையில், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள்.

தொடர்ந்து வாணாபுரம் ஊராட்சி பிரதான சாலை பேருந்து நிலையம் அருகில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2024-25ஆம் நிதி யாண்டில் ரூ.8 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட பயணியர் நிழற்குடையினையும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள். பொது மக்கள் மற்றும் பயணிகள் உள்ளிட்ட அனைவரும் இதனை முறையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றியக்குழுத் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### வல்லம் ஒன்றியத்தில் 3.34கோடி ரூபாய் மதிப்பீட்டில்

# பழங்குடியின மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கான பணி ஆணைகள்!

## முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்!

## ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் தலைமை!

செஞ்சி, ஜூன்14- வல்லம் ஒன்றியத்தில் 3.34கோடி ரூபாய் மதிப்பீட்டில்பழங்குடியின மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கான பணி ஆணைகளை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்.

விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்டமேல் களவாய், பெரும்பூண்டி, சண்டி சாட்சி, தாமனூர், சின்னகரம், அருகாவூர், ஈச்சூர் உள்ளிட்ட 16 க்கும் மேற்பட்ட கிராமங்களில் வசிக்கும் பழங்குடியினர் மக்களுக்குபிரதான் மந்திரி திட்டம் மற்றும்கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்கான பணி ஆணைகள் வழங்கும் நிகழ்ச்சி வல்லம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்றது.

வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் தலைமை தாங்கினார் மயிலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சிவக்குமார் முன்னிலை வகித்தார் வட்டார வளர்ச்சி அலுவலர் ராமதாஸ் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு 3 கோடியே 16 லட்சத்து 68 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 68பழங்குடி இன மக்களுக்கு வீடுகள் கட்டுவதற்கான உத்தரவுகளையும்,

5 பயனாளிகளுக்கு கலைஞர் கனவு இல்ல திட்டத்தின் கீழ் 17 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் வீடுகள் கட்டுவதற்கான உத்தரவினை அவர் வழங்கிசிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம். எல். ஏ பேசுகையில்:

எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற தொலைநோக்கு சிந்தனை யுடன் ஆட்சி நடத்துகின்ற தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நான்காண்டு காலத்தில்தொடர்ந்து மக்களின் தேவைகளை அறிந்து பூர்த்திசெய்து வருகின்றார்.

அந்த வகையில் கலைஞர் வீடுகள் வழங்கும் திட்டத்தை கொண்டு வந்து ஏழைகளின் கனவை நிவர்த்தி செய்து உள்ளார்.

அரசு தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு ஒன்றிய அரசு ஒரு பங்கு வழங்கி வரும் நிலையில் மாநில அரசு இரண்டு பங்கு நிதியை வழங்கிவருவதாக அவர் பெருமிதம் தெரிவித்தார்.

இதில் ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, துரை, இளம்வழுதி, மாவட்ட கவுன்சிலர் அன்பு செழியன்,துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சுந்தர பாண்டியன்,ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர். வட்டார வளர்ச்சி அலுவலர் இளங்கோவன் அனைவருக்கும் நன்றி கூறினார்.



விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பழங்குடியின மக்களுக்கு வீடுகள் கட்டுவதற்கான உத்தரவினை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ .வழங்கினார். உடன்மயிலம் எம்.எல்.ஏ. சிவக்குமார் ,ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார்,ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, துரை. இளம்வழுதி,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராமதாஸ் ,இளங்கோவன் உள்ளனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி, வாணாபுரம் ஊராட்சி பிரதான சாலை பேருந்து நிலையம் மற்றும் பகன்டை கூட்டுச்சாலை பகுதியில் பொதுமக்களின் 30 ஆண்டு கால கனவு நிறைவேற்றும் வகையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் ரூ.38.95 லட்சங்கள் மதிப்பீட்டில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கல் நிலையத்துடன் புதிதாக அமைக்கப்பட்ட பயணியர் நிழற்குடையினை மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தலைமையில், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் 10.06.2025 – செவ்வாய்க்கிழமை அன்று திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர்கள், மாநில,மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கிளைக்கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அரசு துறை சார்ந்த அலுவலர்கள், பொதுமக்கள் என அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.

# மயிலம் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் நல உதவிகள் வழங்கல்!

மயிலம், ஜூன் 14- மயிலம் வடக்கு ஒன்றிய திமுகசார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு 1000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார். ஒன்றிய செயலாளர் மணிமாறன் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 102 வது பிறந்தநாள் விழாவை செம்மொழி நாளாக தீவனூர் ஊராட்சியில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் தலைமை தாங்கினார்.ஒன்றிய கவுன்சிலர் பரிதா சம்சுதீன் அனைவரையும் வரவேற்றார். மயிலம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணிமாறன் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி மஸ்தான் தலைமையில் திமுக நிர்வாகிகள் ஊர்வலமாக சென்று முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞரின் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி ஆயிரம் நபர்களுக்கு இனிப்பு உடன் கூடிய அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை மாவட்ட பொறுப்பாளர் செஞ்சிமஸ்தான் எம்எல்ஏ தொடங்கி வைத்தார்.

இதைத்தொடர்ந்து மயிலம் வடக்கு ஒன்றியம் கொள்ளார் ஊராட்சியில் முனியாண்டி ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. முன்னிலையில் ஒன்றிய பெருந்தலைவர்யோகேஸ்வரி மணிமாறன் கழக இரு வண்ணக் கொடியினை ஏற்றி வைத்தார். தொடர்ந்து பொதுமக்களுக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. இனிப்புகளை வழங்கினார்.

இதில் டாக்டர் மாசிலாமணி, டாக்டர் சேகர், சம்சுதீன், உமா ஞானசேகர், கீதா சிவக்குமார், சாந்தகுமார், கோமதி பிரகாசம்,ராஜ் பரத், சேகர், சண்முகம், சேகர், சிவானந்தம், ஞானசேகர், பாஸ்கர், பிரபு, அன்பு சேகர், உதயவாணன், முனியாண்டி , விஜயன், பூங்கா பாக்யராஜ்.,கந்தவேல், நடராஜன், ரவி, ரத்தினவேல், தமிழ்செல்வம், கருணாநிதி, வீராசாமி ,ரமேஷ், உத்தர குமார், நாராயணன், காந்தி, கோவிந்தம்மாள், சண்முகம், உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வந்து பிறந்த நாள் விழாவை செம்மொழி நாளாக கடைப்பிடிப்பதை முன்னிட்டு, கடலூர் மேற்கு மாவட்டம், கம்மாபுரம் கிழக்கு ஒன்றியம், இருப்பு ஊராட்சியில் அமைந்துள்ள, அரசினர் மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு , மாணவ மாணவிகள் 250 பேருக்கு இலவச எழுது பொருள்கள் வழங்கப்பட்டது, இந்நிகழ்வில் கம்மாபுரம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ஆசைத்தம்பி ,முன்னாள் அவைத்தலைவரும் , பொறுப்பு குழு உறுப்பினருமான ஆர்.மகாலிங்கம் ,பொறுப்பு குழு உறுப்பினர்கள் வி.எஸ்.டி..சக்திவேல், சேதுராமன் , மகளிரணி மாவட்ட துணை அமைப்பாளர் கவிதா, கழக முன்னோடிகள் வல்லம் தனபதி,எஸ்.செந்தில்முருகன், உள்ளிட்ட கிளை கழக செயலாளர்கள், பள்ளி தலைமையாசிரியர், உள்ளிட்ட இருபால் ஆசிரிய பெருமக்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.